Pandian Journal of Women's Studies
*Peer-Reviewed Journal*

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்



Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

# Akalikai Myth from a Feminist Perspective

**Dr. B. Malar**, Assistant Professor of Tamil, S.T. Hindu College, Nagercoil, Tamil Nadu. India.
ORCiD: https://orcid.org/0000-0002-0804-1734
DOI: 10.5281/zenodo.14752431

## Abstract

*Feminism has always provided rich data in the field of Tamil literary research. Through literature, we can understand the state of marginalization of women, who are the rulers of the world. There are many scenes in literature where women are placed as the center of attention and considered in thoughts related to social problems. Literature has not failed to show the situation where every feminist activity is subjected to criticism and her personal thoughts, life, and feelings are not given space. It is inevitable to see in literary evolutions that the tendency to show women for the honor-shame, happiness-sadness activities of the masculine world has become a natural thing since the beginning. In this way, the image of the female mythological element, Akalikai, can be seen to be present explicitly and implicitly in the literature of all periods. This article aims to examine the design of Akalikai in the literature of the mythological period from a feminist perspective.*

**Keywords**: Mythology, Akalikai Myth, Philosophy, Feminism, Patriarchal Society.

## References

[1] Inthubala, Ira. "Tamil Ilakkiyatthil Penniya Kaddamaippum Kaddudaippum." *Tamilmozhi Mattum Ilakkiya Pannattu Aayvithazh*. Thokuthi 2, Sirappu Ithazh 3, Thokuthi 1, February 2020.
[2] Girija, S. "Ilakkiyankalil Penniya Koorukal." *Tamilmozhi Mattum Ilakkiya Pannattu Aayvithazh.* Thokuthi 2, Sirappu Ithazh 3, Thokuthi 1, February 2020.
[3] Geetha Ranchithapakkiyam. Nensai Allum Silappathikaratthil Mathaviyin Penniya Kaddudaippu." *Tamimozhi Mattum Ilakkiya Pannaddu Aayvithazh*. Thokuthi 2, Sirappu Ithazh 3, Thokuthi 1, February 2020.
[4] Subiramaniyan, P. *Paripadal Moolamum Uraiyum*. New Century Book House, Pvt. Ltd. Chennai, October 2011.
[5] Puthumaippitthan. *Puthumaippitthan Kathaikal*. Vartthamanan Pathippagam, 2005.
[6] Poovannan. *Kambaramayanam Moolamum Thelivuraiyum*. Varthamanan Pathippagam, Chennai, July 1985.
[7] *Akalikai Venpa*. Tamil Digital Library.
[8] *Valmiki Ramayanam*. Varthamanan Pathippagam, 2005.

**Author Contribution Statement:** NIL
**Author Acknowledgement:** Nil
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under **Creative Commons Attribution4.0** International License.

Pandian Journal of Women's Studies
*Peer-Reviewed Journal*

*பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்*
*மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்*
Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X



# பெண்ணிய நோக்கில் அகலிகைத் தொன்மம்

**முனைவர் பா. மலர்**, உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, தெ.தி.இந்துக்கல்லூரி, நாகர்கோவில், தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0000-0002-0804-1734
DOI: 10.5281/zenodo.14752431

**ஆய்வுச்சுருக்கம்**

*உலகின் சரிபாதியான பெண்ணின் பங்களிப்பு இலக்கியங்களில் உண்மைத்தரமானதாக அமைகிறதா? என்பதை ஆய்வுச் செய்யும் பொருட்டே 'பெண்ணிய நோக்கில் அகலிகைத் தொன்மம்' என்ற தலைப்பு தேர்ந்தெடுக்கப்பட்டது. அகலிகைத் தொன்மம் மெய்யியல் பெண்ணியப் பார்வையில் மீட்டுருவாக்கம் செய்யப்பட வேண்டுமென்பது இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாகும். இராமயணத்திற்கு முன்பே அகலிகைக் கதை இந்தியாவில் இந்தியாவில் நிலை பெற்றிருந்திருக்கிறது. இராமாயணம் அகலிகைக் கதையை விரிவாக்கம் செய்துள்ளது. மெய்யியல் பார்வையில் நோக்கும் போது, ஒவ்வொரு இலக்கிய வடிவமும் அகலிகை அறிந்தோ அல்லது அறியாமலோ செய்த செயலை ; பெண்ணவளை முன்னிறுத்தியே விமரிசனம் செய்வதை உணரமுடிகிறது. அறிந்தே தவறிழைத்த இந்திரன் சாபம் பெற்ற கையோடு தேவர்களின் தலைவனாகவே தொடர்கிறான். ஆண்மைய சமூகமோ அகலிகையை மீண்டும் மீண்டும் ஆய்வுச் செய்வதை தனது கடமையாகக் கொண்டுள்ளதை உணரமுடிகிறது.*

**குறிப்புச்சொற்கள்:** தொன்மம், அகலிகைத் தொன்மம், மெய்யியல், பெண்ணியம், ஆண்மைய சமுதாயம்.

**முன்னுரை**

தமிழ் இலக்கிய ஆய்வுத் தளத்தில் பெண்ணியம் என்றும் வளமான தரவுகளைத் தந்து கொண்டிருக்கிறது. உலகின் சரிபதியாக இயங்கி வரும் பெண் ஓரம் கட்டப்படும் நிலையை இலக்கியங்களின் வழி உணர முடிகிறது. சமூக சிக்கல் சார்ந்த எண்ணங்களில் பெண் மையப்புள்ளியாக வைக்கப்பட்டு பரிசீலிக்கப்படும் காட்சிகள் இலக்கியத்தில் ஏராளம். பெண்ணிய செயல்பாடுகள் ஒவ்வொன்றும் விமர்சனத்திற்கு உள்ளாக்கப்படுவதும் அவளின் தனிப்பட்ட எண்ணம், வாழ்க்கை, உணர்வுகள் இவற்றுக்கு இடம் அளிக்காத நிலையையும் இலக்கியங்கள் காட்சிப்படுத்த தவறவில்லை. ஆண்மைய உலகின் மான – அவமான, சுக - துக்க செயல்பாடுகளுக்கு பெண்ணை கை காட்டும் போக்கு இயல்பான ஒன்றாக அமைவதை தொடக்க காலம் தொட்டே இலக்கிய பரிணாமங்களில் காண்பது தவிர்க்க முடியாதது. அவ்வகையில் பெண் தொன்மக்கூறான அகலிகை பிம்பம் எல்லா கால இலக்கியங்களிலும் வெளிப்படையாகவும் உள்ளார்ந்தும் இடம்பெறுவதைக் காணலாம். காலந்தோறுமான

Pandian Journal of Women's Studies
Peer-Reviewed Journal
பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X


இலக்கியங்களில் அகலிகை வடிவமைப்பை பெண்ணிய நோக்கில் ஆராய்வதை இக்கட்டுரை நோக்கமாகக் கொண்டுள்ளது.

**அகலிகை**

இந்திய கற்புக்கரசிகள் வரிசையில் முதலிடம் பெற்றவள் அகலிகை. இந்திய பெண்களின் வாழ்வியலுக்கு அகலிகை ஒரு சான்றாதாரம். இந்து சமய தொன்மவியலின்படி அகலிகை கௌதமரின் ரிஷி பத்தினி. அகல்யா, அகல்யை என்ற சிறு மாறுபாடுகளால் அழைக்கப்படும் அகலிகை களங்கமற்றவள் என்ற பொருளமைந்த பெயரினள். பிரம்மதேவரின் மானசீக மகள். புராணங்களின் கூற்றுப்படி உலகை முதலில் யார் வலம் வருவாரோ அவருக்கே அவளை மணம் முடிப்பேன் என்ற பிரம்மதேவனின் ஆணைக்கிணங்க உலகாக கருதப்படும் பசுவை வலம் வந்து அகலிகையை மணந்தார் கௌதமர். வால்மீகி ராமாயணம், கம்ப ராமாயணம், அகலிகை வெண்பா, புதுமைப்பித்தனின், அகலிகை,சாப விமோசனம் என தொடர்ந்து அகலிகை தொன்மம் இலக்கிய பயணத்தில் பதிவு பெற்று தொடர்கிறது.

பேரழகியான அகலிகையை அடைய வேண்டும் என்ற தேவர்களின் அரசன் இந்திரனின் நெறியில்லா ஆசை, அகலிகையின் கணவனான கௌதம முனிவரை ஏமாற்றி அகலிகையை அடைந்த இந்திரனின் கொடூர செயல்பாடு அகலிகை தொன்மத்தின் மையப்புள்ளியாக அமைகிறது. அதன் பின்னான குற்றச்சாட்டுகளும் சாபங்களும் மன்னிப்பளித்தலுமான தொடர் நிகழ்வுகள் ஒவ்வொரு படைப்பாளரின் மனநிலைக்கு ஏற்ப மாறுபடுகிறது. அகலிகை பெரும்பாலான படைப்புகளில் பேதையாக சுட்டப்படுகிறாள். சில படைப்பாளிகள் அவளை கடுமையாக கண்டித்த நிலையையும் காண முடிகிறது. அகலிகை கதைக்குஇருபதுக்கும் மேற்பட்ட பாடபேதங்கள் இந்திய இலக்கியங்களில் காணப்படுகின்றன. அப்பேதங்களை தென்புல இலக்கியங்கள், வடபுல இலக்கியங்கள் என்ற வகைப்பாட்டியலின்படி வேறுபடுத்த முடியும்.

வட இந்திய ராமாயணம் முதல் தென்னிந்திய ராமாயணம் வரை இக்கதை பலவிதமான மாற்றங்களைக் கொண்டிருக்கிறது. காளிதாசரின் ரகுவம்சம், பரிபாடல், நாட்டுப்புறப்பாடல்கள் என பலவற்றிலும் கம்பராமாயணத்திற்கு முன்னர் அகலிகை கதை இடம்பெறுகிறது. பத்ம புராணம் **ராமன் கால் பட்டதும் தனது கல்லுருவம் நீங்கி அகலிகை தெய்வப் பெண்ணாக எழுந்தாள் (பத்ம புராணம்)** என்கிறது.

புராண காலத்திற்கு முன்பிருந்தே அகலிகை தொன்மக்கதை வழக்கிலிருந்து வருகிறது. தமிழ்நாட்டில் 'அகலிகை கல்லானாள்' என்பது தொன்றுதொட்டு நிலவிவந்த நம்பிக்கை. இதனை மிகப் பழைய நூல்களில் ஒன்றான பரிபாடலில்,

**இந்திரன் பூசைஇவள் அகலிகை இவன்**
**சென்ற கவுதமன் சினன் உறக் கல்லுரு**
**ஒன்றியபடி இதென்று உரை செய்வோரும் (பரி., 19: 50-52)**

என்று நப்பண்ணார் எழுதிய செவ்வேள் பாடலில் காண முடிகிறது.

**வால்மீகியின் அகலிகை**

வால்மீகி ராமாயணம் அழகில் மிக உயர்ந்தவளாக அகலிகையைக் காட்டுகிறது. அவள் அழகில் மோகம் கொண்ட இந்திரன் ஆற்றங்கரையில் தன் விருப்பை அவளிடம் தெரிவிக்க கணவரை தவிர பிறரை நினையாமல் வாழும் அகலிகையின் கோபத்திற்கு ஆளாகிறான். நேரடியாக தன்வசப்படுத்த முடியாது கௌதமர் ஆற்றங்கரைக்குச் செல்லும்வேளை கௌதமராக மாறி அகலிகையை புணர்கிறான் இந்திரன். மீண்டு வந்த கௌதமன் இருவரையும் சபிக்கிறார். வால்மீகி இக்கதையின் முதலில் அறியாது இணங்கிய அகலிகை; வந்தவன் இந்திரன் என அறிந்த பின்னும் அவனுடன் கூடி மகிழ்ந்தாள் என்கிறார். இதை திருவானைக்கா புராணம்,

**உடையார் இந்திரனே நமை இருக்கின்றானோ**

**புந்தியின் அரும்பிய பொருவில் ஓதையார் (திருவானைக்கா புராணம்)**

என்று கூறுகிறது. தீய குணம் கொண்ட இந்திரன் அவலட்சணம் ஆவான் என்றும் ஆண்டாண்டு காலம் காற்றையே உணவாக உண்டு அகலிகை கிடக்க வேண்டும் என்றும் கௌதமர் சாபமிடுகிறார். அவள் மற்றவர் கண்களுக்குப் புலப்படாமல் தவத்தில் இருந்தால்; மனைவிக்கு மட்டுமோர் சலுகை தருகிறார். தசரத ராமன் பாதம் பட்டு சாபவிமோசனம் பெறுவாள் என்றுரைக்கிறான்.

**கம்பனின் அகலிகை**

கம்பராமாயணத்தில் அகலிகை கதை மூன்று இடங்களில் வருகிறது. பாலகாண்டம் அகலிகை கதையை 17 பாடல்களில் பதிவு செய்கிறது. 'மாசறு கற்பின் மிக்க அணங்கு' (கம்பராமாயணம் 485: 3) என்றே கம்பர் அகலிகையை பதிவு செய்கிறார். முதலில் தன்னை தீண்டியது கௌதமர் என்றே அகலிகை கருதினாள். ஆனால் கூடலின்பத்தில் கௌதமன் இல்லை என்பதை உணர்ந்தாள் என்பது கம்பரின் கதைப்போக்காக அமைந்துள்ளது. ஆயினும் ராமன் பாதத்தூள் பட்டதும் தூயவளானாள் என்றே கம்பன் உரைக்கிறார். இராவணனின் மாமன் மாரீசன் சீதையை கவர்ந்து வந்து சிறை வைத்தது தவறு என்று அறிவுரை கூறும் போது,

**அந்தரமுற்றாள் அகலிகை பொற்பால் அழிவுற்றார்**

**இந்திர னொப்பார் எத்தனையோர் தாம் இழிவுற்றார் (கம்., ஆரணி., மாரிச. வரை., 733)**

என்கிறார். மாரிசன் வதைப்படலத்தில் இப்பாடல் அமைகிறது. மாயசனக படலத்திலும் அகலிகை கதை மீண்டும் உரைக்கப்படுகிறது. சீதையிடம் தன்னை ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டும் இராவணன்,

**அந்தரம் உணரின் மேனாள் அகலிகை என்பாள் காதல்**

**இந்திரன் கரத்தை புல்லி எய்தினாள் இழுக்குற்றாளே (கம்., ஆரணி., மாரிச. வரை., 734)**

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

என்று உரைப்பதாக அமைந்துள்ளது. இந்திரனை தழுவியதால் அகலிகை மாசடையவில்லை. எனவே சீதை தன்னை ஏற்றுக் கொண்டால் தவறாகாது என்கிறான் இராவணன்.

**அகலிகை வெண்பாவில் அகலிகை**

கம்பராமாயணத்திற்கு பிறகு வெள்ளக்கால் பா. சுப்ரமணிய முதலியாரால் எழுதப்பட்ட அகலிகை வெண்பா அகலிகையை வேறொரு கோணத்தில் காட்சிப்படுத்துகிறது. இந்திர காண்டம், அகலிகை காண்டம், கௌதமர் காண்டம் என்னும் மூன்று காண்டங்களில் 282 வெண்பாக்களால் அகலிகை கதை அமைக்கப்பட்டுள்ளது.

அகலிகையின் அழகால் கவரப்பட்ட இந்திரன் அவளை அணுகுகிறான். அகலிகை அவன் துர் எண்ணம் உணர்ந்து அவனை விலக்குகிறாள். கண்டிக்கிறாள். அகலிகை காண்டத்தில் இந்திரன் மாற்றுருவில் வந்து அகலிகையை அடைய முனைகிறான். அகலிகை அவனை அடையாளம் கண்டு கண்டிக்கிறாள்; அறவுரைகள் கூறுகிறாள்; வாதிடுகிறாள். முடியாத நிலையில் மயங்கிவிழ, நினைவில்லாத அகலிகையை இந்திரன் அடைகிறான். 'புழுத்தான் எரியும் அழல்எய்தினால் அன்ன துடித்தாள். நஞ்சுண்டவர்க்கு மருந்துண்டு. கற்பிழந்த தனக்கு மருந்தில்லையோ ?உயிர் போயினும் கற்பை காக்க வேண்டும் என்னும் உறுதி குன்றிபோனேனே. இதை விட வேறு குற்றம் உண்டோ ? என்று கூறி புலம்பி அழுத அகலிகையே அகலிகை வெண்பாவில் காட்சிப்படுத்தப்படுகிறாள். கல்லாவதற்கோ, கோதமனின் மனைவி என்னும் தகுதியை இழந்ததற்காகவோ அவள் கவலையுறவில்லை. அவனுக்கு தொண்டு செய்யும் வாய்ப்பு இல்லாமல் போனதற்காகவே அகலிகை வெண்பா அகலிகை கலங்கினாள்.இராமனின் பாதத்துகள்பட, மீண்டும்உருபெற்றஅகலிகை சாப விமோசனம் மாசு மறுவற்றது என முடிக்கிறது அகலிகை வெண்பா.

**புதுமைப்பித்தனின் அகலிகை**

1934 இல் புதுமைப்பித்தனால் எழுதப்பட்டது அகலிகை. இக்கதையின் படைப்பு அதுவரையிலான தொன்ம மரபிலிருந்து சிறியதொரு மாற்றத்தை தருகிறது. இதன் படைப்பு தளம் இருபதாம் நூற்றாண்டின் மாறுதலுடன் படைக்கப்பட்டுள்ளது. இயற்கை இகந்த புனைவுகளே இதில் இல்லை. இந்திரன் பூனை போல வருகிறான். பூனையாகவில்லை. இந்திரனாகவே வருகிறான். அகலிகையைக் கூடுகிறான். கௌதமர் வேடத்திலும் வரவில்லை. அகலிகை சாபம் பெறவில்லை. அகலிகை கல்லாகவில்லை. கதை முழுவதும் நடப்பியலோடு இணைந்து செல்கிறது. இக்கதையில் கௌதமர் தான் இலட்சிய கதாபாத்திரமாக படைக்கப்பட்டுள்ளார். **மனத்தூய்மையில் தான் கற்பு. சந்தர்ப்பத்தால் உடல் கலங்கமானால் அவளை என்ன செய்ய முடியும் (ஆ. வேங்கடாசலபதி. பக். 135)** கௌதமரின் இந்த வாசகத்தை20 நூற்றாண்டின் கற்பு கோட்பாடாகக் கொள்ளலாம். மனத்தூய்மை தான் கற்பு. உடலுக்கு ஏற்பட்ட களங்கம் கற்பு கேடு ஆகாது. தூய்மை, களங்கம் இது எல்லாம் ஆண்மைய சமூகத்தில் பெண்ணின் உடல் மீது வைக்கப்பட்ட கற்பு எனும் கோட்பாட்டு தொன்மத்தை

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

பிரதிபலிப்பவையே. இவை ஆண்மைய சமூக வாதங்களாகவே அமைகின்றன. கௌதமரின், 'உணர்ச்சி தேவனையும் மிருகமாக்கி விடுகிறது. மனத்தூய்மையில் தான் கற்பு. சந்தர்ப்பத்தால் உடல் கலங்கமானால் அபலை என்ன செய்ய முடியும்?' என்ற தெளிவை புதுமைப்பித்தன் தான் படைத்த கௌதமருக்கு அளித்தமை ஆச்சரியத்திற்கு உரியது. இதன் விளைவுகளை எதிர்ப்புகளாகஅவர் சந்தித்தது ஆண்மைய உலகில் வியப்புக்குரியது அல்ல. ஒரு ஆண் எழுத்தாளனுக்குள்இருந்த இந்தப் புதுமைச் சிந்தனை வியப்புக்குரியது.

**சாபவிமோசன அகலிகை**

புதுமைப்பித்தனின் சாப விமோசனம் 1943 இல் வெளிவந்தது. இதன் கதை தளமே அகலிகை தொன்மக் கதைகளின் நிலையிலிருந்து மாறுபட்டது. பிற அகலிகை தொன்மக் கதைகள் சாப விமோசனம் பெற்ற அகலிகை தூயவள். அவளை கௌதமன் ஏற்றுக்கொண்டான் என்பதோடு முடிவடைந்துவிடுகிறது.'ராமாயண பரிட்சையம் உள்ளவர்களுக்கு இக்கதை பிடிக்காமல் போகலாம்'என்று தொடங்கும் இக்கதை சாபவிமோசனம் பெற்ற பின்னான சிக்கல் வாழ்வியலை எடுத்துரைக்கிறது. சாபவிமோசனம் பெற்ற அகலிகை, 'தெய்வமே மாசுபட்ட இந்த தசைக்கூட்டம் பவித்திரம் அடைந்தது' என்றே தொடக்கத்தில் எண்ணுகிறாள். கடும் தவத்திலிருந்து எழுந்து வரும் கோதமன் 'பெண்ணின் கேவலத்தில் இருந்து விடுவித்துக் கொள்ள முடியாதவனைப் போல தயங்கி தயங்கி வருகிறான்'. சாப விமோசனத்திற்கு பிறகான வாழ்வு எப்படி என்பது பிரம்மாண்ட மதிலாக இருவருக்குள்ளும் இருக்கிறது என்று புதுமைப்பித்தன் தன் கதை பயணப்பட இருக்கும் வழியை எடுத்துரைக்கிறார். அதேபோல இராமனை பற்றிய புதுமைப்பித்தனின் விமர்சனம், 'இராமனுடைய கல்வி தர்மக்கண் கொண்டு அகலிகையின் நிலையைப் பார்த்தது. தெளிவின் ஒளிப்பூண்டது. ஆனால் அனுபவ சாணையில் பட்டைப் பிடிக்காதது. மனசுக்கும் கரண சக்தியின் நிதானத்திற்கும் கட்டுப்படாமல் நிகழ்ந்த ஒரு காரியத்துக்கா பாத்திரத்தின் மீது தண்டனை? என்று கல்லாக சபிக்கப்பட்ட அகலிகையை எண்ணிய இராமனின் பார்வை அகலிகை தொன்ம வடிவத்தில் இருந்து மாறுபட்டது. நெஞ்சினால் பிழை செய்யாதவளை நீ ஏற்றுக்கொள்வது தான் பொருந்தும் (புதுமைப்பித்தன், சாபவிமோசனம்) என்ற விசுவாமித்திரரின் வாதம் தொன்மவியலிருந்து மாறாதது. ஏமாற்றின் அடிப்படையில் - பசுவை வலம் வந்துபெற்றவள்தானேஅகலிகை. கவுதமனின் மனம் தன்னை சுட்டது என்றபதிவுகள்எல்லாம் புத்தியல் நோக்குகள்.

சாப விமோசனத்தின் பின் உளவியல் ரீதியாக அகலிகை பாத்திரத்தை அணுகுகிறார் புதுமைப்பித்தன். தன்னை சுற்றி நிற்பவர்கள் எல்லோருமே இந்திரனாக தென்படுதல். அளவில்லா பயம், பேச வந்த ஓரிறைச் சொற்களை ஆயிரம் தடவை தனக்குள்ளே சொல்லி பார்ப்பது, தான் கூறியது சரிதானா என பல கோணங்களில் ஆராய்வது, கோதமன் வார்த்தைகளுக்கு உள்ளர்த்தம் உள்ளதா என ஆராய்வது, 'சாபவிமோசனம் பெற்றாலும் பாவ

**Volume 5, Special Issue 1 (2), January 2025** **E-ISSN: 2583-715X**

விமோசனம் கிடையாதா?' என குன்றிப்போவது என அவர் காட்சிப்படுத்துபவை இயல்பு வாழ்வை வெளிப்படுத்தும் மிகையில்லா நடப்பியல். கோதமனே இந்திரனாக தோன்றினான். கோதமனின் கூடல் மீண்டும் ஒரு இந்திர நாடகமாகவே தோன்றியது. இராமன் சீதையை தீக்குளிக்க சொன்னது கேட்ட அகலிகை மீண்டும் கல்லானாள். கல்லாவதே அவளுக்கு நிம்மதியைத் தந்தது.

இராமன் சீதையை தீக்குளிக்கச் சொன்னான் என்ற செய்தியை அறிந்த வேளையில் வெறிகொண்ட கண்ணகியின் ஆவேசத்தை கொண்ட அகலிகை தொன்மவியல் காணாதவள். தன் எதிர்ப்பையும் பிடித்த மின்மையையும் இராமன் சீதையை வழி அனுப்ப வெளிவராது வெளிப்படுத்துகிறான். சீதையிடம் தீக்குளிக்க அவரா சொன்னார் என்று கேட்டவள், ஆக்கமாட்டாளாக அவனா சொன்னான் என்று மரியாதையை குறைக்கிறாள். கற்பினை எவ்வாறு நிரூபிக்க முடியும் என்றும் உலகம் எது? என்றும் உரைக்கும் நிலையில் ஆண்மைய சமூகத்தில் சற்றே உரசி பார்க்கிறார் புதுமைப்பித்தன்.

**மெய்யியல் பெண்ணியப்பார்வை**

தமிழ் இலக்கியங்கள் பெண்ணிய பார்வைக்கு உட்படுத்த வேண்டிய காலச்சூழல் இது. பெண்மைய சமூகம் என்பது நிர்மாணிக்க முடியாத இக்காலச் சூழலில் பெண்கள் இலக்கியங்களில் காட்சிப்படுத்தும் விதம் பரிசீலிக்கப்பட வேண்டியது அவசியம் ஆகிறது. ஆணுக்கு இங்கே பெண் இழைப்பில்லாத நிலையில் இலக்கியங்கள் பெண்ணை எவ்வாறு இன்றளவும் வெளிப்படுத்துகிறது என்பதை உறுதிப்படுத்த வேண்டியது கட்டாயம் ஆகிறது. உலகின் சரிபாதியான பெண்ணின் பங்களிப்பு இலக்கியங்களில் உண்மை தரமானதாகவே வெளிப்படுத்தப்படுகிறதா என்பதை ஆய்வு செய்யும் பொருட்டே பெண்ணிய நோக்கில் அகலிகை துன்பம் என்ற இத்தலைப்பு தேர்வு செய்யப்பட்டுள்ளது. அகலிகை தொன்ம மெய்யியல் பெண்ணியப் பார்வையில் மீட்டுருவாக்கம் செய்யப்பட வேண்டும் என்ற நோக்கினை இவ்வவாய்வு கட்டுரை நோக்கமாகக் கொண்டுள்ளது.இராமாயணத்திற்கு முன்பு அகலிகைக்கதை இந்தியாவில் பரவலாக இருந்திருக்கிறது.இராமாயணம் அகலிகை கதையை புத்தாக்கம் செய்தது. இந்திய இராமாயணங்கள் அகலிகையை இந்திரனால் கற்பழிக்கப்பட்ட பெண்ணாகவே எடுத்துரைக்கிறது. சில கதை மாறுபாடுகளை கொண்டிருப்பினும் இதுவே மையம். சாப விமோசனம் என்ற கட்டமைப்பில் வால்மீகி இராமாயணம், கம்பராமாயணம், அகலிகை வெண்பா, புதுமைப்பித்தனின் அகலிகை, சாப விமோசனம் உள்ளிட்ட இலக்கியங்கள் சமகாலத்தில் இல்லாது இலக்கிய வரலாற்றில் தொடர் கருப்பொருளாக அகலிகைக்கதை உரைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு இலக்கிய வடிவமும் அகலிகையின் அறியாது செய்து செயல்படாக கருதியும் தெரிந்தே தவறினாள் என்றும் சுட்டுகின்றதோடு விமரிசனத்திற்கு உள்ளாக்குகின்றன. தவறிழைத்த இந்திரனை சாபம் அளித்ததோடு விட்டுவிட்ட சமூகம் அகலிகையின் அறிந்தோ அறியாமலோ செய்த செயல்பாட்டினை கடும்

விமர்சனத்திற்கு உள்ளாக்குகின்றன. அகலிகை சாப விமோசனம் பெற்றதும் புனிதமானவளாக கருதப்படுவதுடன் கதையை முடித்து விடுகின்றன. அதே வேளையில் கணவன் அல்லாத ஒருவனுடன் கூடியபோது அவன் கணவன் இல்லை என்பது உணராத நிலை, உணர்ந்த பின்னும் தன் கூடலை நிறுத்தாத நிலை, இரண்டையுமே கண்டிக்கின்றன. கற்பெனும் தன்மை இலாதவளாக அகலிகை எடுத்துரைக்கப்படும் காட்சியை வால்மீகி இராமாயணம், கம்பராமாயணம் இவற்றில் காணமுடிகிறது. உணர்விழந்த கூடலின்பத்தில் திழைத்ததால் அவள் கல்லாக சபிக்கப்படுகிறாள். உணர்வின்றி காற்றை உண்டு தவமியற்றும் உணர்வில்லா கல்லாக அவளை புராண, இதிகாசங்கள் கௌதமரின் வழி சாபமிடுகின்றன.

அகலிகை வெண்பா உணர்வற்று மயங்கிய நிலையில் இந்திரன் அவளை அடைந்ததாக உரைகின்றது. இங்கே கௌதமரை விட அகலிகை தன் நிலைக்கு இறங்குகிறாள். கல்லாவதற்கு கவலை கொள்ளவில்லை. கணவனுக்கு பணிவிடை செய்வதற்கு தடை ஏற்பட்டதற்காகவே கவலையுறுகிறாள். கௌதமர் அகலிலையின் மனவருத்தம் மாயவே கல்லாக்கினார் என்கிறது அகலிகை வெண்பா.

பாலியல் வல்லுறவுகளும் அத்துமீறல்களும் மலிந்து போன இக்காலக்கட்டத்தில் அகலிகை தொன்மம் மீதான உறுதியானதொரு பெண்ணிய பார்வை பதியனிடப்பட வேண்டியது அவசியமாகிறது. பெண்ணின் அழகு ஆணின் உணர்வில் காமத்தை தூண்டுவதாக அமைகிறது என்ற பார்வை மாற்றப்பட வேண்டும். பெண் அழகு பிறரால் நுகரப்படும் பண்டம் அல்ல. பெண் உடல் மாற்றி மாற்றி தம் இச்சைக்கு பயன்படுத்த எண்ணும் ஆணின் மனநிலைக்கு அகலிகை தசைக்கூட்டமாகவே வெளிப்படுகிறாள். அங்கே ஒரு உயிருக்கான உணர்வோ, ஆசையோ, உரிமையோ மறுக்கப்படுதல் உலகில் சரிபாதியான பெண்ணுக்கு இழைக்கப்படும் சமூக மறுப்பாகவும் கொடுமையாகவும் கருத இடமுண்டு. போர்களின் போதும் தனிநபர் போட்டிகள், பிடிக்கா தன்மை இவை உள்ளிட்ட தர்க்கநிலைகளில் பெண் உடலை மையப்படுத்தி பழிவாங்கும் நடவடிக்கைகள் தொடர் வரலாறாகவே அமைகின்றன.

பெண்ணழகு பாலியலைத் தூண்டுவது என்ற சமூக எண்ணம் அதிநவீன அறிவியல் உலகிலும் தொடர்ந்து வருவது வளர்ச்சி குன்றிய மனித மனநிலையை வெளிப்படுத்துவதாகவே அமைகிறது. அகலிகை அழகாக படைக்கப்பட்டாள். இதுவே அகலிகை தொன்மத்தில் எழுந்த சிக்கலாக அமைகிறது வேறெந்த ரிஷி பத்தினியும் எதிர்கொள்ளாத சிக்கலாகவே இதை கருத வேண்டிஉள்ளது. இந்து தொன்மவியலின் அடிப்படை அகலிகை கதையில் இந்திரனும், கௌதமரும் அகலிகைக்கு போட்டியிட்டுள்ளனர். அகலிகையை பிரம்மதேவன் அழகு தவத்திற்கு பயன்பட வேண்டும் என்ற தத்துவத்தின் அடிப்படையில் படைத்ததாக இந்து தொன்மவியல் பேசுகிறது. ஆனால் படைப்பின் நோக்கம் சிதைந்து தவ வாழ்க்கை சீர்குலைத்ததாகவும், காற்றை உண்டு கல்லாய் கடந்து மீண்டும் தன்னுரு பெற்றதாகவும் அகலிகை வாழ்வியல் இராமாயண கதைகளில் பேசப்படுகிறது.

**Volume 5, Special Issue 1 (2), January 2025** **E-ISSN: 2583-715X**

ஒரு பெண் புரிந்துணர்ந்து கொள்ளமுடியாத அறியாமையால் செய்த தவறுக்கு தண்டிக்கப்பட்டமை ஆண்மைய சமூக அமைப்பால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாக அமைகிறது. அதோடு மட்டுமல்லாமல் ஏராளமான சாதக பாதக வாதங்களையும் உருவாக்கியுள்ளதை காலந்தோறும் காணமுடிகிறது. ஆனால் அகலிகையை அடைந்தே தீர வேண்டும் என்ற இந்திரன் சாபம் பெற்றதோடு களத்தில் இருந்து வெளியேற்றப்பட்டு விடுகிறான். அவன் மீதான விமர்சனங்கள் அகலிகை அளவுக்கு வளர்ந்திருக்கவில்லை.

> **பெண்ணின் கற்பு மட்டும் கணவனால் வேண்டடப்படுவதற்கு அடிப்படை காரணம், தன் மனைவியால் ஈன்றெடுக்கப்படும் குழந்தை தன் குழந்தை என்ற உறுதியை பெறுதலும் தன் தனிச்சொத்து தன் குழந்தையையே சேர வேண்டும் என்ற உறுதிப்பாடும் இருப்பதாக பேசப்படுகிறது. (கிரிஜா, பக். 109)**

ஆனால் அகலிகை தொன்மத்தில் அகலிகையான பெண்ணானவள் ஒரு ரிஷியின் மனைவி. ரிஷிக்கான தனிச்சொத்து வேத மந்திரங்களும் தவ வலிமையும் மட்டுமே. ஒரு ரிஷி தானறிந்த மந்திரங்களை தன் சுய வாரிசுக்கு மட்டுமே கற்றுத் தந்து கடத்துவதுமில்லை. தவ வலிமை அவரைத் தாண்டி அவரது சந்ததிக்கு கடத்தப்படுவதும் இல்லை. **பெண் என்பவள் பூமியில் பிறக்கும் போது ஒரு உயிர்தான். ஆனால் அவளை பெண்ணாக கட்டமைப்பது கட்டுப்பாடுகள் விதிப்பது நமது ஆதி சமூகமாக இருந்திருக்கிறது. (இந்துபாலா. பக். 52)** என்ற நிலையில் எந்தவிதமான கட்டுடைப்பையும் செய்ய அகலிகை முயலவில்லை என்பது இலக்கியங்களில் அமையும் அகலிகை தொன்மம் சுட்டும் உண்மை. புதுமைப்பித்தனின் அகலிகை கூட தன்னை கல்லாக்குவதில் சுகம் கண்டாளே தவிர தன்னை சுற்றிய சமூகத்திற்கு எதிராக எந்த சொல்லையும் எறியவில்லை என்பது ஆச்சரியத்திற்குரியது. அவள் ஆதி சமூக கட்டுப்பாடுகளை கட்டுடைத்து தனக்கு நேர்ந்த அவலத்திற்கு நீதி கேட்டுக்கும் பெண்ணாக இயங்கவில்லை, மலையாளத்தில் ஸ்ரீதேவியின் கல்லிகை அகலிகை துன்பத்தைப் பதிவு செய்கிறது. இந்திரனை முதலாளித்துவமாகவும் கௌதமரை புராணிகளின் வடிவமாகவும் அகலிகை பாட்டாளி அல்லது தொழிலாளியாகவும் மார்க்ஸியம் கருதுகிறது. **சிலப்பதிகாரம் மாதவியின் ஆரம்பமே அவளை விற்பனை பொருளாகவே காட்சிப்படுத்துகிறது. (கீதா. பக். 126)** அகலிகை இந்திரனுக்கும் கோதமனுக்குமான போட்டி பொருளாக இந்து தொன்மவியல் காட்சிப்படுத்தப்படுகிறது. வால்மீகி இராமாயண கதை அதை உறுதிப்படுத்துகிறது.

'ஏமாற்றி பெற்ற பொருள்தானே' புதுமைப்பித்தன் சாபவிமோசனம் அதனை எள்ளல் நடையில் நினைவூட்டுகிறது. தெரிந்தே நெறிதவறும் ஆண்கள் இந்திரனைப் போன்று தப்பித்துக் கொள்கிறார்கள். இந்திரனைப் போன்று அரசனாகவே வலம் வருகிறார்கள். ஆனால் தவறிழைக்கப்பட்ட பெண்கள் அகலிகையாக அல்லல்படுகிறார்கள். அவர்களுக்கு சாபம் அளிக்க கௌதமனாக சமூகம் விழிப்புடன் காத்திருப்பது இக்கால வெள்ளத்தின் நடப்பாகவே உள்ளது உணர முடிகிறது இலக்கியங்களும் அதையே பிரதிபலிக்கின்றன.

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

**துணைநூற்பட்டியல்**

[1] இந்துபாலா, இரா. “தமிழ் இலக்கியத்தில் பெண்ணிய கட்டமைப்பும் கட்டுடைப்பும்.” *தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்*, தொகுதி 2, சிறப்பிதழ் 3. தொகுதி 1, பிப்ரவரி 2020.

[2] கிரிஜா, செ. “இலக்கியங்களில் பெண்ணிய கூறுகள்.” தமிழ் மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ், தொகுதி 2, சிறப்பிதழ் 3. தொகுதி 1, பிப்ரவரி 2020.

[3] கீதா ரஞ்சிதபாக்கியம், “நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரத்தில் மாதவியின் பெண்ணிய கட்டுடைப்பு.” *தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்*, தொகுதி 2, சிறப்பிதழ் 3. தொகுதி 1, பிப்ரவரி 2020.

[4] சுப்பிரமணியன், பி. *பரிபாடல் மூலமும் உரையும்.* நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட். சென்னை, அக்டோபர் 2011

[5] புதுமைப்பித்தன். *புதுமைப்பித்தன் கதைகள்.* வர்த்தமானன் பதிப்பகம், 2005.

[6] பூவண்ணன், *கம்பராமாயணம் மூலமும் தெளிவுரையும்.* வர்த்தமானன் பதிப்பகம், சென்னை, ஜூலை 1985.

[7] *அகலிகை வெண்பா.* தமிழ் டிஜிட்டல் லைப்ரரி.

[8] வால்மீகி ராமாயணம். வர்த்தமானன் பதிப்பகம், 2005.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons. org/licenses/by/4. 0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.